# இந்துக் கோயில்களில் கட்புலக்கலை வெளிப்பாடுகள் - யாழ்ப்பாணப் பிரதேசத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்துக் கோயில்களை மையமாகக் கொண்ட ஓர் ஆய்வு

ர. பிரகாஷ்

**ஆய்வுச் சுருக்கம்**

*இலங்கையில் இந்து ஆலயங்கள் பக்தி நெறிக்கு முக்கியத்துவம் கொடுக்கும் அதே பட்சத்தில் கலை வெளிப்பாடுகளை கட்புலக்கலை வடிவங்களினூடு எடுத்துக்காட்டுவதற்கான கலைக் கோயில்களாகவும் விளங்குகின்றன. தொன்மையான வேர்களைக் கொண்ட ஒரு தனித்துவ கண்ணோட்டத்தை வழங்கும் கண்கவர் கலைப்படைப்புக்களை பிரதிபலிக்கும் கலைக் களஞ்சியமாக இந்துக்கோயில்கள் விளங்குகின்றன. இலங்கையில் எண்ணிக்கையில் அதிகமான இந்து ஆலயங்களைக் கொண்ட மாவட்டமாக யாழ்ப்பாணம் காணப்படுகின்றது. அங்கு தேர்ந்தெடுக்கப்பட்ட தொன்மையான இந்து ஆலயங்களின் கட்புல கலை வெளிப்பாடுகள் இனங்காணப்பட்டு இங்கு ஆய்வுக்குட்படுத்தப்படுகின்றன. புராதன இந்து ஆலயங்களின் கட்புல கலை வெளிப்பாடுகள் பாரம்பரிய மற்றும் நவீன பாணிகளுடன் இணைந்ததான தன்மையை மெய்ப்பிக்கின்றன. தென்னிந்திய திராவிடக் கலையின் வீச்சு அதிகமாக இந்து ஆலயங்களின் கட்புலக் கலை வடிவங்களில் பிரதிபலிக்கின்றது. அத்துடன் இங்கு சமகாலத்திய கட்புலக் கலைகளில் அதிநவீன நடைமுறைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு பழமைகள் புறந்தள்ளப்படும் போக்கினையும் இனங்காண முடிகிறது. திராவிட மரபுகளில் ஊடக ரீதியான வேறுபாடுகள் மற்றும் தொழில்நுட்பம் முதலியவற்றின் ஊடாக கட்புலக்கலைகள் புதிய அவதாரங்களை எடுத்திருக்கின்றமையை இங்கு சுட்டிக்காட்ட முடியும்.*

**திறவுச்சொற்கள்:** கட்புலக்கலை,திராவிடக்கலை,கர்ப்பக்கிரகம்,விமானம்,கோபுரம்,தூண்கள்

**அறிமுகம்**

யாழ்ப்பாணக் குடாநாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட பாரம்பரிய இந்து ஆலயங்களில் வெளிப்படுத்தப்படும் கட்டிட, சிற்ப, ஓவிய அலங்கார கட்புலக்கலை வடிவங்கள் பற்றிய ஓர் ஆய்வாக இது அமைகின்றது. இந்து ஆலயங்களின் கட்புலக் கலை வடிவங்கள் இந்து மதத்தின் புராணம், இதிகாசம், வரலாறு, சமூகம், தத்துவம், கலாச்சாரம், பண்பாடு முதலிய அம்சங்களில் செறிந்து காணப்படுகின்றன. ஓர் இனத்தவரின் நாகரீகம், பண்பாடு முதலியவற்றை எடுத்தியம்பும் கலாச்சார சின்னமாகவே கோயில்கள் விளங்குகின்றன. குறிப்பாக தென்னிந்திய கலை வடிவங்களின் முழுமையான தழுவல்களை யாழ்ப்பாணப் பிரதேச இந்துக்கோயில்கள் கொண்டிருக்கின்றன.

பொதுவாக இந்தியக் கோயில்களின் கட்புலக் கலை வடிவங்கள் நாகரம், வேசரம், திராவிடம் முதலிய கலைப் பாணிகளில் முக்கியம் பெற்று விளங்குகின்றன. அதிலும் குறிப்பாக தென்னிந்தியக் கோயில்களின் கட்புலக் கலை வடிவங்கள் முழுமையாக திராவிட பாணியிலேயே பின்பற்றப்பட்டுள்ளது (Gananasekara iyar, 2005, P.24). இந்த திராவிடப் பாணியில் அமைந்த மரபுகளை யாழ்ப்பாணப் பிரதேசக் கோயில்களின் கட்புலக்கலை வடிவங்களில் இனங்காண முடியும். இந்துமதம் சைவம் - சிவன், சாக்தம் - சக்தி, வைஷ்ணவம்-விஷ்ணு, காணபத்தியம் - கணபதி, கௌமாரம் - முருகன், சௌமாரம் - சூரியன் எனும் ஆறு பிரிவுகளாக ஸ்ரீசங்கரர் வகுத்துள்ளார (Vasantha Nadarajan, 2003, p.19). குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் சௌமாரம் - சூரியக்கடவுள் தவிர்ந்த ஏனைய

ஐந்து பிரிவுகளுக்கும் அதிகமான கோயில்கள் காணப்படுகின்றன. இந்த ஐந்து பிரிவுகளில் உள்ள புராதன கோயில்கள் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டு அவற்றின் கட்டிடக்கலை வடிவங்கள் பற்றி இங்கு பகுப்பாய்வு மேற்கொள்ளப்படுகிறது. இதில் குறிப்பாக கர்ப்பக்கிரகம், விமானம், கோபுரம், தூண்கள், மண்டபங்கள், சிற்பங்கள், ஓவிய அலங்கார வெளிப்பாடுகள் திராவிட பாணிகளுடன் ஒப்பிட்டு பகுப்பாய்வு செய்யப்படுகின்றது. ஆகம, சாஸ்த்திர விதிமுறைகளுக்கு உட்பட்ட தூய்மையான திராவிட பாணிகளை இந்த இந்துக்கோயில் கட்டிடக்கலை வடிவங்களில் இனங்கண்டு கொள்ள முடியும். ஆனால் ஊடகம், வர்ணம், வடிவமைப்புரீதியில் முழுமையான திராவிட மரபினை கோயிலின் உட்புறத்திலும் மற்றும் வெளிப்புறச்சூழலிலும் புராதன வடிவங்கள் புதிய பாணிகளுடன் மாற்றம் காண்பதனை இங்கு இனங்காண முடியும். இதனைத் தீர்மானிப்பது கோயிலின் பொருளாதார வளம், கோயிலைக் கட்டுவதில் மக்களிடையே ஏற்பட்ட போட்டி, பழைய கோயிலைப் புதுப்பித்தல், இதற்காக பழைய கட்டிடக்கலை வடிவமைப்புக்கள் உடைக்கப்படல், சிறிய கோயில்கள் பெரிய கோயில்களாக மாற்ற மடைதல், சமூகத்தில் சாதிப்பாகுபாடு காணப்படுதல் முதலிய காரணங்களினால் பழைய திராவிட மரபினுள் புதிய கலை வடிவங்களும் உட்புகுத்தப்படுகின்றமையை சுட்டிக்காட்ட முடியும்.

**இந்துமதம்**


கோயில் என்பது இறைவனை வணங்குதல், வேள்விகள் நடாத்துதல் முதலிய மதம் சார்ந்த ஆன்மீக நோக்கங்களுக்காக அமைக்கப்பட்ட கட்டிடமாக விளங்குகின்றது. இந்துக்களின் தெய்வ வழிபாட்டிற்கு ஆலயங்களே உறுதுணையாக காணப்படுகின்றன. ஆலயங்களும் அதன் கோபுரங்களும் ஊருக்கு அணிகலண்களாகத் திகழ்கின்றன. இந்துமதம் கட்டிடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, இசைக்கலை மற்றும் சமய இலக்கிய கலைகளுடன் ஒன்றிணைந்த தத்துவங்களையும், சமயக் கிரியைகளை உணர்த்தும் மதமாகவும் விளங்குகின்றது. இந்துமதம் மக்கள் பண்பாட்டின் உறைவிடமாகும்.

இந்துக்களின் இவ் வழிபாட்டுத்தலங்கள் தேவஸ்தானம், கோவில், ஆலயம், தலம் என பல பெயர்களால் அழைக்கப்படுகின்றது. இந்து சமயம் சைவம், வைஷ்ணவம், சாக்தம், காணாபத்தியம், கௌமாரம், சௌமாரம் எனும் ஆறு மதப்பிரிவுகளைத் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது. இதில் இந்து என்பது சைவம் எனும் பொருளையே உணர்த்துகின்றது. சைவ சமயத்திற்கு அடிப்படையானவை சிவாகமங்களும், சைவமரபுகளுமேயாகும். சிவாகம மரபில் முக்கியத்துவம் பெறுவது திருக்கோயில் அமைப்புக்களும், திருவுருவ அமைப்புக்களும் கிரியை மரபுகளுமேயாகும். இந்துக்கோயில்களில் திருவிழா என்பது சமய வழிபாட்டிற்கும், சமூக முன்னேற்றத் திற்குமாகவே நடைபெறுகின்றது. ஒரு கிராமத்தைச் சேர்ந்த பல சமூகத்தினருக்கு உதவி புரியும் சமூக விழாவாகவும் மகோற்சவம் பயன்படுகிறது. இந்து ஆலய கட்டிட சிற்பஅலங்கார வடிவங்களைப் பற்றி பல கல்வெட்டுச் சான்றுகள் ஊடாகவும் சிற்ப சாஸ்த்திர நூல்களினூடாகவும் படைப்புக்கள் ஊடாகவும் மன்னர்களின் ஆதரவுகளினூடாகவும் இனங்காண முடியும்.

**இந்தியா மற்றும் இலங்கையில் இந்துமதச் செல்வாக்கு**

இந்து மதத்தின் தாயகமான இந்தியாவில் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே கோயில்கள் இருந்திருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. இந்திய நாட்டில் பண்டைய காலத்தில் இருந்து ஆரியர் மற்றும் திராவிடர் எனும் இனத்தவர்கள் வாழ்ந்து வருகின்றனர். விந்திய மலைக்கு வடக்கே வடமொழியாகிய சமஸ்கிருதத்தை தம்தாய்மொழியாகக் கொண்ட இனத்தவராக

ஆரியர் காணப்படுகின்றனர். திராவிடர் தமிழ் மொழியை தம் தாய்மொழியாகக் கொண்டு விந்திய மலைக்குத் தெற்கே வாழ்ந்து வருகின்றனர். இவ்விரு இனத்தவர் களிடையேயான பண்பாட்டு பழக்கவழக்கங்கள் வேறுபட்டனவையாகக் காணப்படுகின்றன. இந்தியாவின் பல பாகங்களிலும் உயர்ந்து விளங்கிய கட்டிட, சிற்ப, ஓவிய முறையானது அந்நாட்டினை அண்மித்துள்ள இலங்கை, யாவா, சுமாத்திரா, கம்போடியா, சயாம் முதலிய நாடுகளிலும் பரவி வளர்ச்சி பெற்றது. இந்திய நாடு இலங்கையுடன் பலதுறைகளிலும் தொன்றுதொட்டு தொடர்புடையதாக இருந்து வருகின்றது. இதனை இருநாட்டு சரித்திர நூல்கள் மற்றும் கல்வெட்டுக்களினூடாக இனங்காண முடியும்.




**படம் 01,** A - Nagara, B- Dravida, C - Vesara types, (in Book ), Swami Hrashananda, 1998, All about Hindu Temples, Sri Ramakrishna math, mylapore, Madras

**நாகர பாணி,** B **திராவிடபாணி,** C **வேசர பாணி**

இந்திய இந்துக் கோயில் கட்டிட சிற்ப ஓவியக்கலைப் பாணிகள் நாகர, திராவிட, வேசர பாணிகளினூடாக பிரித்து நோக்கப்படுகின்றன (படம் 01). நாகரப் பாணி ஆரியர்களினுடைய பாணி யாவும் திராவிடப் பாணி தமிழர்களினுடைய பாணியாகவும் வேசரப் பாணி நாகர திராவிட பாணிகள் கலந்த பாணியாகவும் காணப்படுகின்றது. தமிழ் நாட்டில் சிறப்படைந்து வாழ்ந்த சேர, சோழ, பாண்டிய, பல்லவ, நாயக்க மன்னர்கள் தங்கள் ஆதிக்கத்தை இலங்கை மீதும் செலுத்தினர் என இருநாட்டு சரித்திரங்களும் கூறுகின்றன. அவர்களின் காலனித்துவத்திற்குள் இலங்கை இருந்த காலங்களில் சைவசமயக் கொள்கைகளும் கோயிற்கட்டிடக்கலையும் நிலையங்களும் இலங்கையில் பரவியது. அதன் பயனாக இன்றும் இலங்கை சைவசமயத்திற்கும் தமிழ்ப் பண்பாட்டிற்கும் ஓர் சிறந்த நிலைக்களமாக விளங்குகின்றது. இலங்கையில் மிகப்பண்டைய காலந்தொடக்கம் சைவசமயம் பரவியிருந்தது என்பதற்கு மகாவம்சம், இராமாயணம் முதலிய நூல்களிலும் தேவாரத் திருமுறைகளிலும் சான்றுகள் உள்ளன.

**இலங்கையில் இந்துமதம்**

இலங்கையில் கட்டிட, சிற்ப, ஓவிய கலை வளர்ச்சி இந்திய நாட்டின் கலை வளர்ச்சியுடன் நெருங்கிய தொடர்புடையதாகும். இந்திய சிற்பங்கள் சமயத் தொடர்புடையவையாக காணப்பட்டவை போன்றே இலங்கைச் சிற்பங்களும் சமயத் தொடர்புடையனவாக அமைந்துள்ளன. இலங்கையில் உபயோகிக்கப்படும் சிற்ப நூல்கள் மாயா மருதம், ரூபாவளி என Dr.ஆனந்தகுமாரசுவாமி குறிப்பிடுகின்றார். அசோகச்சக்கரவர்த்தி காலம் தொடக்கம் ஏற்பட்ட சமய மாறுதல்களாலும் அரசியல் புரட்சிகளாலும் இந்தியாவில் பல்வேறு வித அம்சங்கள் பொருந்திய சிற்பமுறைகள் (Styles of art) தோன்றி விருத்தியடைந்தன. அச்சிற்ப முறைகளுள் மௌரிய, காந்தார, ஆந்திர, குப்த, பல்லவ, சோழ, பாண்டிய, விஜயநகர, நாயக்க சேதுபதிகள் பாணிகள் முக்கியம் பெறுகின்றன (Navaratnam,K.,2007,P.09) இலங்கையின் கட்டிட, சிற்ப, ஓவிய வளர்ச்சிக்காலங்களை நான்கு வகையாக பிரித்து நோக்க முடியும்.

1. அனுராதபுரக்காலம் - தேவநம்பியதீஸன் தொடக்கம் 9ம் நூற்றாண்டுவரை (மௌரிய, ஆந்திர, குப்த, பல்லவ, சிற்ப முறைகளின் செல்வாக்கு)
2. பொலனறுவைக்காலம் - 10ம் நூற்றாண்டு வரை (சோழ, பாண்டிய சிற்ப முறைகளின் செல்வாக்கு)

3. கண்டி நகாக்காலம் - 14ம் நூற்றாண்டு 18ம் நூற்றாண்டு (விஜய நாயக்க சேதுபதிகள் சிற்ப முறைகளின் செல்வாக்கு)
4. கொழும்பு நகர்காலம் - 19ம் நூற்றாண்டுக்குப் பின்னர் உள்ள காலம் (சமகால தென் இந்திய சிற்ப முறைகளின் செல்வாக்கு)

இலங்கையில் நாலந்தாவிலுள்ள 'கெடிகே' எனும் ஆலயம் மற்றும் இசுறுமுனியா புடைப்புச்சிற்பங்கள் பல்லவர் கட்டிட சிற்ப முறைகளைப் பின்பற்றி அமைக்கப்பட்டுள்ளன. இரண்டாம் சிலதேவாலயம், மற்றும் தூபராம ஆலயம் முதலியன சோழ கட்டிட சிற்ப முறையில் அமைந்துள்ளன. முதலாம் சிவதேவாலயம் மற்றும் யாப்பகூவா சிற்பங்கள் பாண்டிய சிற்பமுறைகயில் கட்டப்பட்டுள்ளன. பொலனறுவையிலுள்ள பௌத்த ஆலயங்களின் புறச்சுவர்களில் காணப்படும் சிற்ப வேலைப்பாடுகள் தென் இந்திய கோயில் சுவர்களிலுள்ள சிற்ப வேலைப்பாடுகளை நினைவூட்டுகின்றன. இலங்காதிலக விகாரையில் கர்ப்பக்கிரகம், அந்தராளம், அர்த்தமண்டபம் ஆகியவற்றுடன் அமைந்த ஓர் சைவ ஆலயத்தை நினைவூட்டுகின்றது. இவ்விகாரை நாயக்க பாணியில் அமைந்துள்ளது. இலங்கையில் கட்டப்பட்ட கருங்கல் விகாரையான கடலாதெனிய விகாரை தென்இந்திய சிற்பியான கணேஸ்வராச்சாரியால் கட்டப்பட்டது. கண்டி தலதாமாளிகை தூண்கள் தென் இந்திய நாயக்கர் பாணியை ஒத்ததாகக் காணப்படுகின்றது. பழைய ஆலயங்களும் தாதுகோபங்களும் 19ம் நூற்றாண்டுக்கு பின் திருத்தப்பட்டு வருகின்றன. களனிவிகாரை முற்றாகப் புதுப்பிக்கப்பட்டு தென்இந்திய சிற்பமுறையில் அமைக்கப்பட்டுள்ளது. தென்இந்திய கட்டிட சிற்ப மரபுகள் இலங்கையில் பௌத்த, இந்து மதக் கட்டிட அமைப்புகளுடன் ஒன்றிணைந்து காணப்பட்டதனை இதனூடாகக் காண முடிகின்றது.

**யாழ்ப்பாணத்தில் இந்துமதம்**

இலங்கையில் 25 மாவட்டங்களிலும், ஆறாயிரத்து அறுபத்தெட்டுக்கும் அதிகமான இந்துக்கோயில்கள் பரந்து காணப்படுகின்றன. இலங்கையில் இந்து கலாச்சார அமைச்சினால் 30.09.2016ம் ஆண்டு வெளியிடப்பட்ட கோயில்கள் பதிவுகள் பற்றிய அறிக்கையின்படி யாழ்ப்பாண மாவட்டமே இலங்கையில் எண்ணிக்கையில் அதிகளவிலான இந்து கோயில்களைக் கொண்ட பிரதேசமாகக் காணப்படுகின்றது. ஆயிரத்து ஐந்நூற்றி இருபத்தி ஒன்பதிற்கும் அதிகமான இந்துக்கோயில்களை கொண்ட, இலங்கையில் முதலாவது மாவட்டமாக யாழ்ப்பாணப் பிரதிபலிக்கின்றது. இங்கு தொன்மையான இந்துக்கோயில்கள், புதுப்பிக்கப்பட்ட பழமையான இந்துக்கோயில்கள், புதிதாக கட்டப்பட்ட இந்துக்கோயில்கள் என பிரித்து இனங்காண முடியும்.

இலங்கையின் வடபகுதியில் ஆரம்ப காலங்களில் சிறுவழிபாட்டு இடமாகக் காணப்பட்ட இடத்தில் இருந்து கி.பி 12ம் நூற்றாண்டின் பின்னர் பாரிய கட்டிடமாக கோயில்கள் வளர்ச்சியடையத் தொடங்கின. யாழ்ப்பாண பிரதேசத்தில் தமிழர்கள் அதிகமாக செறிந்து வாழ்ந்தமையால் இந்துமதம் சார்ந்த கட்டிடங்கள் பல கட்டப்பட்டன. இந்தியாவின் வணிக தொடர்பு மற்றும் படையெடுப்புக்கள் காரணமாக தென் இந்திய கட்டிட சிற்ப ஓவிய மரபுகளும் பின்பற்றிய இந்துக்கோயில்கள் பல கட்டப்பட்டன. யாழ்ப்பாணத்தில் இந்துமதப் பாரம்பரியங்கள் பேணப்பட்டு கோயில்களில் சடங்கு பாரம்பரியம், பூஜைப்பாரம்பரியம், திருவிழா கொண்டாடும் பாரம்பரியங்கள் முதலியன இங்கு முக்கியம் பெறுகின்றன. யாழ்ப்பாணத்தில் காணப்படும் பண்டைய பாரம்பரிய இந்து ஆலயங்கள் திராவிட கட்டிட கலைமரபுகளுக்கு உட்பட்டும் சமகாலத்தில் நாகர, வேசரப் பாணிகளிற்குப் பட்டும் அமைந்துள்ளதனை இனங்காண முடியும்.


இவற்றினை பாராம்பரிய பண்டைய இந்து ஆலயங்களிலும், பின்பு திருத்தி அமைக்கப்பட்ட இந்து ஆலயங்களிலும், சமகால இந்து ஆலயங்களிலும் இனங்காண முடியும்.

பொதுவாக யாழ்ப்பாண பாராம்பரிய இந்து ஆலயங்களில் காணப்படும் கட்டுல கலைவடிவங்களை கட்டிட, சிற்ப, ஓவிய அலங்கார வேலைப்பாடுகள் தென்இந்திய திராவிட கலைமரபுகளினூடாக இனங்காண முடியும். இந்துமத ஆலங்களின் கட்டிட அமைப்பை வெறும் ஆலய வணக்கத்தல அமைப்பாகக் கருதாது ஒருமானிடனின் உடல் உறுப்புக்களின் தன்மையை ஒத்ததான வடிவ என வாஸ்து சாஸ்த்திரம் கட்டுல அழகியலுடன் புகழ்கின்றது. இதற்கு ஏற்பவே இந்து ஆலயங்கள் அமைக்கப் பெறுகின்றன.

சிகை – ஆலய ஸ்தூபி
சிரசு – கர்ப்பக்கிரகம்
முகம் – அர்த்தமண்டபம்
கழுத்து - ஸ்நபன மண்டபம்
இருதயம், வயிறு – மஹாமண்டபம்
தொடை – நிருத்தமண்டபம்
முளங்கால் - ஆஸ்தான மண்டபம்
பாதம் – கோபுரம்

பண்டைய காலத்தில் மண், மரம், செங்கல் கொண்டு கோயில்கள் அமைக்கப்பட்டன. அதனாலேயே அவை இன்று அழிவடைந்து மறைந்து போயின எனலாம். பிற்காலத்தில் கருங்கல் திருப்பணிகளாக அவை மாற்றி அமைக்கப்பட்டன. இந்து சமய கலைக்களஞ்சியமாக விளங்கும் சிவாகமங்கள் திருக்கோயில் கட்டிட அமைப்பு, சிற்பம், ஓவியம், அலங்காரம், வழிபாடு, இசை,கலை, தத்துவம் என பல அம்சங்களைச் சுட்டிக்காட்டி இந்துப் பண்பாட்டில் அடிப்படைத் தன்மைகளைக் கூறுகின்றது. திருக்கோயில் கட்டிட, சிற்ப அமைப்பு பற்றி சிவாகமங்கள், சிற்ப சாஸ்திரங்கள், வாஸ்து சாஸ்திரங்கள் முதலியன இந்துப்பண்பாட்டில் இணைந்து காணப்படுகின்றன. தமிழ்நாட்டில் இந்துக் கோயில் கட்டிடம்,சிற்பம்,ஓவியம் பற்றி பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம், மணிமேகலை,நெடுநெல்வாடை முதலிய தொன்மையான தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன. பெரும் விமானங்கள் உடைய ஆலயங்கள் அமைத்தல் சோழர் காலத்திலேயே இடம்பெற்றது. அத்துடன் கோபுரங்களை மாடங்களைப்போல அடுக்கடுக்காக அமைக்கும் வழக்கம் திராவிடர்கள் கையாண்ட முறையாகும். இந்து ஆலய கோபுரத்திலே தெய்வீகவியல் வரலாறுகள், புராணவரலாறுகள் கடவுள், தேவர்கள் , அசுரர்கள், மானிடர்கள், விலங்குகள், பறவைகள், இயற்கை காட்சிகள், இந்துமத குறியீடுகள்,அலங்கார வடிவமைப்புக்கள் என பல வகையான சிற்பங்கள் காணப்படுகின்றன.இவை கருங்கல், வெள்ளைக்கல், சுதை முதலிய ஊடகங்களில் வடிவமைக்கப்பட்டுள்ளன. சகளாதிகாரம் எனும் புராதன சிற்ப நூலில் மண்ணினாலும் மரத்தாலும் உருவங்களைச் செய்வதற்கான முறைகள் வகுக்கப்பட்டுள்ளன.

யாழ்பிரதேச இந்து ஆலயங்களில் சிற்பங்கள் மரம், உலோகம், கருங்கல், சீமெந்து, வெள்ளக்கல், முதலிய ஊடகங்களினூடாகவே படைக்கப்பட்டுள்ளன. “அசைவுடைய உருவங்கள் பொன், வெள்ளி, செம்பு, சுதை, ஒடு, முதலிய ஊடகங்களாலும் அசைவில்லா மூலவிக்கிரகங்கள் கல்லினாலும் மரத்தினாலும் மாத்திரமே செய்ய வேண்டும்” என மாநசார சிற்ப நூலில் கூறுகின்றது. இந்து ஆலய கோபுரங்களில் சித்திர வேலைப்பாடுகள் அதிகம் காணப்படும் மரபு விஜயநகர காலத்திலேயே ஆகும்.




**படம் 02,கர்ப்பக்கிரகத்தின் மேல் உள்ள விமானம், வடக்குப் பக்கம், நாகரபாணி, பொற்பதி அம்மன் கோயில்,(புகைப்படம்)**


*யாழ்ப்பாணத்தில் தென்னிந்திய திராவிட பாணியில் அதிக எண்ணிக்கையிலான இந்துக்கோயில்கள் கட்டப்பட்டுள்ளன.இங்கு நாகர பாணியிலும் அமைந்த இந்துக் கோயில் களை இனங்காணமுடியும். யாழ்ப்பாணத்தில் பொற்பதி அம்மன் கோயில் முழுமையாக நாகர பாணியில் கட்டப்பட்ட இந்துக்கோயிலாகும் (படம் 02).அதன் கர்ப்பக்கிரகத்தின் மேல் காணப்படும் விமான அமைப்பு நாகர பாணியில் உயர்ந்த சிகர வடிவமைப்பைக் கொண்டமைந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும். இந்த கோயில் கோபுர அமைப்பக் கொண்டிருக்கவில்லை. வெள்ளை சலவைக்கல்லினாலான கர்ப்பக்கிரகத்தினையும் சீமெந்தினாலான விமான அமைப்பினையும் இங்கு காணமுடியும். இந்தக் கோயிலின் வெளிப்புற சுற்றுப்பிரகாரத்தில் கிழக்குத்திசை நோக்கியுள்ள சிவலிங்க கோயிலின் விமான மும் முற்றாக நாகர பாணியிலேயே வடிவமைக்கப் பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும் (படம் 03).*



**படம் 03 விமானம், கிழக்குப் பக்கம், நாகரபாணி, சிவலிங்க கோயில், பொற்பதி, (புகைப்படம்)**



**படம் 04,கர்ப்பக்கிரகம், மேற்குப் பக்கம், வெள்ளை சலவைக்கல், பொற்பதி அம்மன் கோயில், (புகைப்படம்)**



**படம் 05 கர்ப்பக்கிரகம், மேற்குப் பக்கம், கருங்கல்,மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில், (புகைப்படம்)**

யாழ்ப்பாணத்தில் பிந்திய நாயக்க கால பாணியில் அமைந்த கலை வெளிப்பாடுகள் அதிகமாக சமகால இந்துக் கோயில்களில் காணப்படுகின்றன.இங்கு கர்ப்பக்கிரகங்கள் பளிங்குக் கல்,வெள்ளை சலவைக்கல்,சுண்ணாம்புக் கல்,கருங்கல் முதலிய ஊடகங்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளன(படம் 04,05). கர்ப்பக் கிரகத்தின் உட்பகுதி எவ்விதமான கலை வெளிப்பாடுகளும் இன்றி அதன் மூன்று பக்க வெளிப்புறப்பகுதியில் தேவகோஷ்டங்கள்,மகர தோரணங்கள்,சிறிய அளவிலான தெய்வ உருவங்கள்,இருபுடைப்பில் அமைந்த தூண் வரிசைகள் முதலயவற்றினால் அலங்கரிக்கப்பட்டுள்ளதனை இங்கு இனங்காணமுடியும். கர்ப்பக்கிரகத்தின் அதிட்டானம் பல வடிவங்களில் காணப்படுகின்றது.சில இந்து ஆலயங்களில் அதிட்டானமும் கர்ப்பக்கிரகமும் வர்ணம் தீட்டப்பட்டு விஜய நகர பாணியை ஒத்ததாக அமைந்துள்ளது




**படம் 06,விமானம், மேற்குப் பக்கம், சீமெந்து, கைலாய பிள்ளையார் கோயில், (புகைப்படம்)**



**படம் 07 விமானம், வடக்குப் பக்கம், சீமெந்து, கைலாய பிள்ளையார் கோயில், (புகைப்படம்)**

இந்து ஆலயங்களில் கர்ப்பக்கிரகத்தின் மேல் காணப்படும் பகுதி விமானம் என்றழைக்கப்படுகின்றது.இதில் தெய்வ உருக்கள், தேவர்கள், அசுரர்கள், மானிடர்கள், இயற்கைத் தாவரங்கள், விலங்குகள், பறவைகள், மகரதோரண அலங்காரங்கள், புராணக்காட்சிகள் என பல சிற்ப வடிவங்களைக் கொண்டும் உச்சியில் ஒரு கலசத்தினையும் கொண்டும் விளங்குகின்றது. அதிகமான இந்துக் கோயில்களில் சீமெந்து ஊடகத்தினால் வடிவமைக்கப்பட்ட வட்ட வடிவான விமான அமைப்புக்களே இடம்பெற்றுள்ளன. அத்துடன் விமானங்கள் மஞ்சள்,செம்மஞசள்

வர்ணங்கள் பூசப்பட்டு ஓர் கவர்ச்சிகரமான கண்ணோட்டத்தை ஈர்க்கக்கூடிய பகுதியாக காணப்படுகின்றது (படம் 06,07).





**படம் 08,** Stages of the Dravindian Bracket, (In Book) Percy Brown, 1984,Indian Architecture (Buddhist & Hindu Periods), D.B. Taraporevala Sons & Co Pvt, Ltd, Bombay.



**படம் 09 அர்த்த மண்டபத்தூண்கள், கிழக்குப் பக்கம், பல்லவர் பாணி,**
**கைலாய பிள்ளையார் கோயில், (புகைப்படம்)**

அதிக தூண்கள் நிறைந்த மண்டபங்களை கொண்டதாக இனங்காணப்பட்டுள்ளன. அர்த்த மண்டபம் தொடக்கம் மஹா மண்டபம்,நிருத்த மண்டபம்,முக மண்டபம் வரையான பகுதிகளில் காணப்படும் தூண்களின் வடிவமைப்புக்கள் ஒரே மாதிரியாக காணப்படவில்லை. தென் இந்தியாவில் தூண்களின் போதிகை மற்றும் அதன் வடிவமைப்புக்கள் காலத்திற்கு காலம் மாற்றமடைந்து வந்துள்ளதனை இனங்காண முடியும் (படம் 08). அர்த்த மண்டபத்தில் பல்லவர்கால தூண் அமைப்பினையும் (படம் 9), மஹா மண்டபத்தில் சோழர் மற்றும் பாண்டியர் கால தூண் அமைப்பினையும், நிருத்த மண்டபத்தில் விஜயநகர மற்றும் மதுரை நாயக்கர் கால தூண் அமைப்பினையும்,முக மண்டபத்தில் பிந்திய நாயக்கர் கால தூண் அமைப்பினையும் கோயிலின் உள்ளிருந்து வெளிவாயில் வரை ஒவ்வொரு காலத்தை பிரதிபலிக்கும் பாணியை இங்கு சுட்டிக்காட்ட முடியும்.



**படம் 10 மஹா மண்டபத்தூண்கள், வடக்குப் பக்கம், டொறிக் பாணி,**
**கைலாய பிள்ளையார் கோயில், (புகைப்படம்)**

இந்து ஆலயங்களில் கோபுரத்தின் முன்பு காணப்படும் மண்டபங்கள் முகமண்டபங்கள், வில்லு மண்டபங்கள் என அதன் வடிவமைப்பைப் பொறுத்து பெயர் பெறுகின்றது. இங்கு இராசமல்லுக்கூரையும் (King postroot) டொறிக் (Doric) தூணும் கொண்ட ஓட்டு மண்டபங்கள், திராவிட தூண்களை உடைய மண்டபங்கள், வில்லுவடிவான மண்டபங்கள் என பிரித்து

நோக்க முடியும். காலணித்துவ ஆட்சியின் பின்புலத்தின் தாக்கமும் இங்கு மேலைத்தேய தூண் வடிவமைப்புடன் (Doric) இணைந்து காணப்படுகின்றது(படம் 10).



**படம் 11,கோபுரம், மேற்குப் பக்கம், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில், (புகைப்படம்)**

இந்துக் கோயிலின் பிரதான வாயிலில் காணப்படும் முக்கியமான பகுதியாக கோபுரம் விளங்குகின்றது. கோபுரம் மூன்று தொடக்கம் பன்னிரண்டு வரையான பல தளங்களைக் கொண்டமைந்துள்ளது..இது புடைப்புத் தூண் அமைப்புக்கள், தெய்வ உருக்கள், தேவர்கள், அசுரர்கள், மானிடர்கள், இயற்கைத்தாவரங்கள், விலங்குகள், பறவைகள், மகரதோரண அலங்காரங்கள், புராணக்காட்சிகள் என பல சிற்ப வடிவங்களைக் கொண்டும் உச்சியில் கலசங்களையும் கொண்டும் விளங்குகின்றது. அத்துடன் இவை சீமெந்து, பளிங்குக் கல், வெள்ளை சலவைக்கல், கருங்கல் முதலிய ஊடகங்களைக் கொண்டு அமைக்கப் பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தில் உள்ள தொன்மையான கோபுரமாக மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலின் மேற்குப்பக்க கோபுரத்தினை சுட்டிக்காட்ட முடியும் (படம் 11).




**படம் 12,சுவரோவியங்கள், மேற்குப் பக்கம், கைலாய பிள்ளையார் கோயில், (புகைப்படம்)**



**படம் 13 சுவரோவியங்கள், வடக்குப் பக்கம், கைலாய பிள்ளையார் கோயில், (புகைப்படம்)**



**படம் 14,மேற்கூரை ஓவியங்கள், கிழக்கு நுழைவாயில் மேல்பக்கம், வல்வெட்டித்துறை முத்துமாரி அம்மன் கோயில், (புகைப்படம்)**



**படம் 15,மேற்கூரை ஓவியங்கள், அலங்காரங்கள், கிழக்கு நுழைவாயில் மேல்ப்பக்கம், வல்வெட்டித்துறை முத்துமாரி அம்மன் கோயில், (புகைப்படம்)**

இந்து ஆலய ஓவிய வெளிப்பாடுகளில் மேற்கூரை ஓவியம், சுவர் ஓவியம், அலங்கார வடிவமைப்புக்கள், என பலவகையாக காணப்படுகின்றது. இதில் முப்பரிமான ஓவியம், இருபரிமான ஓவியம் முதலிய கட்புல அழகியல் வெளிப்பாடுகளும் இடம்பெறுகின்றன. அத்துடன் கோபுரங்கள் அதிலுள்ள சிற்பங்கள் முதலியவற்றுக்கு வர்ணம் பூசுதல் பாணியும் நாயக்கர் காலத்தில் இருந்து உருவாகின்றது. ஓவியக்கலையில் இந்து புராணக்கதைகள், அவதார ஓவியங்கள், வரலாற்று ஓவியங்கள், தெய்வ ஓவியங்கள், நாயன்மார் ஓவியங்கள் என பலவகை யாகக் காணப்படுகின்றது. இதனை கைலாய பிள்ளையார் கோயில் சுவரோவியங்களில் இனங்காண முடிகின்றது(படம் 12,13). ஆனால் இங்கு காணப்படும் ஓவிய வெளிப்பாடுகளில் திராவிடப்பாணி பின்பற்றப்படாமல் மேலைத்தேய ஓவியப் பாணி பின்பற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இரேகை,வர்ணம்,உருவ வெளிப்பாடு,பின்னணிக் காட்சி முதலியன வற்றில் முழுமையான மேலைத் தேய ஓவியப் பாணியின் செல்வாக்கு இடம்பெற்றுள்ளதனை, வல்வெட்டித்துறை முத்துமாரி அம்மன் கோயில் மேற்கூரை ஓவியங்கள் மற்றும் அலங்காரங்களில் இனங்காண முடிகின்றது (படம் 14,15).

**முடிவுரை**

யாழ்ப்பாணப் பிரதேசத்திலுள்ள இந்துக் கோயில்களின் காண்பியக்கலை வெளிப்பாடுகள் முழுமையாக தென்னிந்திய திராவிடப் பாணிகளைப் பின்பற்றி இருந்தாலும் கூட காலத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து சமூகதேவைகளுக்கேற்ப கலைப்படைப்புக்கள் புதிதாகபடைக்கப்பட்டுவருகின்றனஎன்பதனை இங்கு அவதானிக்க முடிகின்றது. சில இந்து ஆலயங்களில் தொன்மையான திராவிடமரபு கட்புலக்கலைகளில் முழுமையாகப் பின்பற்றி அமைக்கப்பட்டுள்ளது.பல இந்து ஆலயங்களில் சமகால சமூகதேவைகளுக்கேற்ப புராதன கலை மரபுகளிலிருந்து விடுபட்டு புதிய கலை மரபுகளுக்குள் உள்வாங்கபடும் நிலமையை இங்கு இனங்காண முடிகின்றது. இந்துக்கோயிலின் நிர்வாகம்,பொருளாதார வளம்,சமூக ஏற்றத்தாழ்வுகள்,போட்டிகள் முதலிய பல காரணங்களினால் திராவிடப் பாணியில் உள்ள கட்புலக்கலைகள் கோயிலின் குறித்த பகுதிகளைத் தவிர ஏனைய இடங்களில் மாற்றத்திற்கு உள்ளாகின்றன. கட்புலக்கலைகள் கோயிலின் கர்பக்கிரகம், அர்த்த மண்டபம் முதலிய இடங்களைத் தவிர விமானம், கோபுரம், மண்டபங்கள், தூண்கள் முதலிய இடங்களில் காலத்திற்கு காலம் வர்ணம்,தொழில்நுட்பம் போன்ற ஊடகங்களினால் பல மாற்றத்திற்கு உள்ளாகின்றன. நிலையான, இந்துக் கோயில் ஆகம சாஷ்த்திர விதிமுறைகளின் பின்னணியில் நிலையற்ற மாறுதல்களை தோற்றுவிக்கக் கூடிய,தொன்மையான மரபை மீறும் செயற்பாட்டினை இங்கு அனுமானிக்க முடியும்.

**Bibliography**

1. Gnanasekara Iyar,G.,2005,What is Hindu Religion(In Tamil), Manimekalai Publication,Channai.
2. Hindu Temples in Sri Lanka (In Tamil), 1984 , Survey Research Report on Hindu Temples of Sri Lanka, Hindu Cultural Ministry of Sri Lanka , Colombo.
3. Indirapala,K.,1999,Dravidian Architecture in Sri Lanka(InTamil),Kumaran Publishers, Vadapalani Chennai
4. Jouveau Dubreull,G.,1987, Dravidian Architecture , Asisan Education Services, New Delhi.
5. Krishnaveny,N.A.,2008,Indian Aesthetics(In Tamil), Kumaran Book House, Colombo.
6. Krishnaraja,S., 2004 , Hindu Art Theories (In Tamil), Kumaran Book House, Colombo.
7. Navaratnam,K., 2006,Sculptures of South India(In Tamil),Kumaran Book House, Colombo.
8. Nirmala Ramachandran,2000,Hindu Heritage-I,Stamford Lake Publication,Sri Lanka.
9. Pathmanathan,S.,1994,Hindu Temples of Sri Lanka,Part-I(In Tamil),Department of Hindu Religious and Cultural Affairs , Colombo.
10. Pathmanathan,S.,2001,Hindu Traditions:Temples and Sculptures (In Tamil),Department of Hindu Religious and Cultural Affairs , Colombo.
11. Pathmanathan,S.,2006,Hindu Temples of Sri Lanka,Kumaran Book House, Colombo.
12. Percy Brown, 1984,Indian Architecture (Buddhist & Hindu Periods), D.B. Taraporevala Sons & Co Pvt, Ltd, Bombay.
13. Prasanna Kumar Acharya,1996, Indian Architecture in India and Manasara –Silpasastra, Munshiram Manoharlal Publishers (Pvt) Ltd, New Delhi.
14. Prasanna Kumar Acharya,1998, Hindu Architecture – According to Manasara Series, Munshiram Manoharlal Publishers (Pvt) Ltd, New Delhi.
15. Seenevasan,K,R.,2010,Temples of South India(In Tamil) The Director,National Book Trust, Delhi.
16. Sivaramamurthi,C. , 1970, Indian Painting , National Book Trust ,India.
17. Sivaramamoorthy,K.,1974,Indian Paintings(In Tamil),The Director,National Book Trust, Delhi.
18. Sivathamby,K., 2007 , The Art Heritage of Tamils , International Institute of Tamil Arts, Switzerland.
19. Swami Hrashananda, 1998, All about Hindu Temples, Sri Ramakrishna math, mylapore, Madras
20. Vasantha Nadarajen,2003,History of Sri Lankan hindu Temples,Manimekalai Publication,Channai-17.

**Journals and Articles**

1. Kenneth Robbins,X.,1985,The Sculpture of India, Art of Asia,Vol-15(05), Art of Asia Publication Ltd,Hong Kong.
2. Leop Bazou,S,J.,1955,A Sculpture's Paradise in South India Mamallapuram,Tamil Culture,Vol-IV(01),Academy of Tamil Culture,Madras.
3. Marcello Tranchini,1989,Arts forms Tanjore,Art of Asia,Vol-19(05), Art of Asia Publication Ltd,Hong Kong.
4. Sasithara Kurukal,I.,2016, Shape of Hindu Temple(In Tamil),Hindu Oli,Vol-1,All Ceylon Congress,Colombo.